செ.வெ.எண்:41 நாள்:16.11.2018

**கரூர் மாவட்டம்**

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரண பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு பாதிப்படைந்த விளைநிலங்களை கணக்கெடுக்க அலுவர்களுக்கு உத்தரவிட்டார்.**

கரூர் மாவட்டம், குளித்தலை கோட்டம், லாலாபேட்டை, குளித்தலை, தண்ணீர்பள்ளி, வலையபட்டி போன்ற இடங்களில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு விழுந்த மரங்களை அப்புறப்படுத்த பேரிடர் மேலாண்மை குழுவினருக்கு உத்தரவிட்டு புயலால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை கணக்கெடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டம் முழுவதும் கஜா புயலால் பாதிப்படைந்த பகுதிகள் முழுவதிலும், நிவாரணப்பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட பணியாளர்கள் தங்கள் பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சாலைகள், வீடுகள் மீது விழுந்த மரங்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. சாய்ந்த மின்கம்பங்களில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு பணியாளர்கள் தற்காலிக இணைப்பு வழங்க மேற்கொண்டு வருகிறார்கள். குளித்தலை பகுதியில் புயலால் சாய்ந்த வாழைமரங்கள் நேரயாக பார்வையிட்டோம், கரூர் மாவட்டம் முழுவதும் இதுபோல் பயிர் சேதங்கள் இருக்கின்றதா என்று வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் தொடர்ந்து கணக்கிட பணிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்துறை, மின்சாரவாரியத்துறை சார்ந்த அனைத்துத்துறை அலுவலர்களும் வேகமாக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கணக்கெடுப்பு பணிகள் நடந்து வருகிறது. இப்பணி முடிவடைந்து அதன் விபரம் அரசுக்கு அனுப்பப்பட்டு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் திரு.லியாகத், குளித்தலை வட்டாட்சியர் திரு.சுரேஷ்குமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திருமதி கலா உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**